

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் மருதுபாண்டியர் அரசு மருத்துவமனையில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. முலம் கட்டப்பட உள்ள டயாலிசிஸ் மையத்திற்கான பணிகள் துவக்க விழாவில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், ப.சிதம்பரம் எம்.பி., கார்த்தி சிதம்பரம் எம்.பி., மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ்

# குழந்தைகள் பாதுகாப்பு - பராமரிப்பு - வளர்ச்சியை உறுதி செய்ய வழிமுறைகள் உள்ளதா?

## மக்களவையில் காஞ்சிபுரம் எம்.பி. – க.செல்வம் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28 - காஞ்சிபுரம் நாடாளு மன்ற உறுப்பினர் அவர்கள் 25.07.2025 அன்று நடை பெற்ற நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துக்கு எழுப்பிய கேள்விகள்.



(அ) தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் கடினமான சூழ்நிலைகளில் உள்ள குழுந் தைகளின் நலன் மற்றும் மறு வாழ்வுக்காக மிஷன் வாத் சல்யா திட்டத்தை அரசு செயல்படுத்துகிறதா.

(ஆ) அப்படியானால், மிஷன் வாத்சல்யா திட்ட த்தின் நோக்கங்கள் / முக்கிய கூறுகள் குறிப்பிடுவது குழந்தை பாதுகாப்பு, பாரம ரிப்பு மற்றும் வளர்ச்சியை உறுதி செய்யும் தொலைநோக் குப் பார்வையுடன் அது எவ் வாறு ஒத்துப்போகிறது.

(இ) மிஷன் வாத்சல்யா வின் கீழ் குழந்தைகள் பாது காப்பிற்கு முன்னுரிமை அளிக்க ஏதேனும் உத்தி/வழி முறை வரைவு வகுக்கப்பட் டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்.

(ஈ) மேற்படி மாநிலத்தில் மிஷன் வாத்சல்யாவின் கீழ் ஆதரிக்கப்படும் குழந்தை பரா மரிப்பு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங் கள் எண்ணிக்கை மற்றும் வகைகள் யாவை?

ஒன்றிய அமைச்சரின் பதில் கள் வருமாறு:-

(அ) முதல் (இ) தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங் கள்/யூனியன் பிரதேசங்களி லும் மத்திய அரசின் நிதியுதவி யுடன் கூடிய 'மிஷன் வாத் சல்யா' என்ற திட்டத்தை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. நிறுவன பராமரிப்பு மற்றும் நிறுவனம் சாராத பரா மரிப்பு சேவைகள் உள்ளிட்ட கடினமான சூழ்நிலைகளில் உள்ள

குழந்தைகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே முன் வரையறுக்கப் பட்ட செலவுப் பகிர்வு, அடிப் படை திட்டங்கள்/ திட்டங் களை வடிவமைக்கும்போது குழந்தைகளின் சிறந்த நலன் கள் எப்போதும் கவனிக்கப்ப டுவதை உறுதி செய்வதே மிஷன் வாத்சல்யாவின் நோக் கமாகும். இதில் அத்தியாவ சிய சேவைகள். குழுந்தைக ளுக்கான அவசரகால சேவை களை நிறுவுதல் மற்றும் நிறு வன மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

மிஷன் வாத்சல்யா திட் டம், குடினமான சூழ்நிலை களில் வாழும் குழுந்தைகள் இலக்குகளை அடைவதற்காக மாநில மற்றும் மாவட்ட அள வில் சட்டரீதியான சேவை வழங்கும் கட்டமைப்புகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மிஷன் வாத் சல்யா திட்டத்தின் கீழ், ஒவ் வொரு மாநிலம்/யூனியன் பிர தேசங்களி லும் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங் கம் (SCPS) மற்றும் மாநில தத் தெடுப்பு வள நிறுவனம் (SARA) ஆகியவை அமைக்கப் பட்டுள்ளன. மேலும் மாவட் டங்களில் குழுந்தைகள் நலக் குழு, சிறார் நீதி வாரியம் மற் றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு ஆகியவை அமைக் கப்பட்டுள்ளன.

மிஷன் வாத்சல்யா திட் டத்தின் கீழ் நிறுவப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவன ஙகள் (CCIs), வயதுக்கு ஏற்ற கல்வி, தொழில் பயிற்சி, பொழுதுபோக்கு, சுகாதாரப் பராமரிப்பு. ஆலோசனை போன்றவற்றை ஆதரிக்கின் றன. நிறுவனம் சாராத பராம ரிப்பின் கீழ் ஆதரவு, பராம ரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தை களுக்கு நிதியுதவி, வளர்ப்பு பராமரிப்பு மற்றும் பராமரிப் புக்குப் பிந்தைய பராமரிப்பு மூலம் வழங்கப்படுகிறது.

நிறுவன பரமரிப்பு மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகள் உள்ளிட்ட கடின மான சூழ்நிலைகளில் உள்ள குழுந்தைகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே முன்

வரையறுக்கப்பட்ட செல வுப் பகிர்வு அடிப்படை திட் டங்கள்/திட்டங்களை வடிவ மைக்கும்போது குழந்தை களின் சிறந்த நலன்கள் எப் போதும் கவனிக்கப்படுவதை உறுதி செய்வதே மிஷன் வாத் சல்யாவின் நோக்கமாகும். இதில் அத்தியாவசிய சேவை கள், குழுந்தைகளுக்கான அவ சரகால சேவைகளை நிறுவுதல் மற்றும் நிறுவனம் சாராத பரா மரிப்பு சேவைகளை வலுப்ப டுத்துதல் ஆகியவை அடங் கும்.

மிஷன் வாத்சல்யா திட் டத்தின் கீழ் நிறுவப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவ னங்கள் (CCIs), வயதுக்கு ஏற்ற கல்வி, தொழில் பயிற்சி, பொழுதுபோக்கு, சுகாதாரப் பராமரிப்பு, ஆலோசனை போன்றவற்றை ஆதரிக்கின் றன. நிறுவனம் சாராத பராம ரிப்பின் கீழ் ஆதரவு, பராம ரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைக ளுக்கு நிதியுதவி, வளர்ப்பு பராமரிப்பு மற்றும் பராமரிப் புக்குப் பிந்தைய பராமரிப்பு மூலம் வழங்கப்படுகிறது.

மிஷன் வாத்சல்யா திட் டம் என்பது நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் இணைந்த குழுந்தை மேம் பாடு மற்றும் குழுந்தை பாது காப்பின் முன்னுரிமைகளை அடைவதற்கான ஒரு திட்ட மாகும். இது சிறார் நீதி பராம ரிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துவ தோடு, குழந்தை உரிமைகள், வக்காலத்து மற்றும் விழிப்பு ணர்வை வலியுறுத்துகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச் சர் பதிலளித்தார்.





திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் பழனி சட்டமன்றத் தொகுதி பழனி மேற்கு ஒன்றியம் ஆண்டிபட்டி ஊராட்சி ஆண்டிபட்டி பகுதியில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிழற்குடையை பொது மக்கள் பயன்பாட்டுக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் திறந்து வைத்தார். உடன் பழனி கோட்டாட்சியர், மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சௌந்தரபாண்டியன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபாகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், துணை தலைவர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை வே.ஆழ்வார்

**ஜூலை 28 (2008)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தொடர்ந்து பத்து ஆண்டுகளாக திருநெல்வேலி நகரச் செயலாளராகவும், கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது நகர பொறுப்பாளராகவும், பின்னர் பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

திருநெல்வேலி நகர்மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்றதோடு மட்டுமல்லாமல் குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### ஈரோடு வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 28.07.2025 | சத்தியமங்கலம் நகரம் | நகரப் பகுதி | பவானி கண்ணன்<br>செ.தமிழரசன் |
| 2 | | சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியம் | சிக்கரசம்பாளையம் | பவானி கண்ணன்<br>செ.தமிழரசன் |
| 3 | | கெம்பநாயக்கன்பாளையம் பேரூர் | கெம்பநாயக்கன்பாளையம் | பவானி கண்ணன்<br>செ.தமிழரசன் |
| 4 | 30.07.2025 | கோபிச்செட்டிப்பாளையம் வடக்கு ஒன்றியம் | ஒத்தக்குதிரை | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 5 | | பி.மேட்டுப்பாளையம் பேரூர் | விநாயகர் கோயில் அருகில், பி.மேட்டுப்பாளையம். | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 6 | | அந்தியூர் தெற்கு ஒன்றியம் | பிரம்மதேசம் | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 7 | 02.08.2025 | பவானிசாகர் தெற்கு ஒன்றியம் | புங்கம்பள்ளி | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 8 | | பவானிசாகர் வடக்கு ஒன்றியம் | வெள்ளியம்பாளையம் | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 9 | | பவானிசாகர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், பவானிசாகர். | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 10 | | சத்தியமங்கலம் தெற்கு ஒன்றியம் | அரசூர் | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 11 | | டி.என்.பாளையம் வடக்கு ஒன்றியம் | கொண்டையம்பாளையம் | பவானி கண்ணன்<br>செ.நந்தகோபால் |
| 12 | | வாணிப்புத்தூர் பேரூர் | வாணிப்புத்தூர் | பவானி கண்ணன்<br>செ.நந்தகோபால் |
| 13 | 04.08.2025 | அந்தியூர் வடக்கு ஒன்றியம் | தாமரைக்கரை | பவானி கண்ணன்<br>செ.தமிழரசன் |
| 14 | 06.08.2025 | அந்தியூர் மத்திய ஒன்றியம் | எண்ணமங்கலம் | எஸ்.எம்.செந்தில்<br>வெ.சரண்யா |
| 15 | 07.08.2025 | கோபிச்செட்டிப்பாளையம் மத்திய ஒன்றியம் | நஞ்சைகோபி | நாகம்மை கருப்பையா<br>சூ.க.தாரணி |
| 16 | | கூகலூர் பேரூர் | கொளத்துக்கடை | நாகம்மை கருப்பையா<br>சூ.க.தாரணி |
| 17 | | கோபிச்செட்டிப்பாளையம் தெற்கு ஒன்றியம் | செம்மாண்டம்பாளையம் | நாகம்மை கருப்பையா<br>சூ.க.தாரணி |
| 18 | 08.08.2025 | நம்பியூர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், நம்பியூர். | நாகம்மை கருப்பையா<br>சூ.க.தாரணி |
| 19 | | கொளப்பலூர் பேரூர் | கொளப்பலூர் | நாகம்மை கருப்பையா<br>சூ.க.தாரணி |
| 20 | | லக்கம்பட்டி பேரூர் | கரட்டடிபாளையம் | நாகம்மை கருப்பையா<br>சூ.க.தாரணி |
| 21 | 09.08.2025 | அந்தியூர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், அந்தியூர். | ஈரோடு ப.இளையகோபால்<br>வெ.சரண்யா |
| 22 | | அத்தாணி பேரூர் | அத்தாணி | ஈரோடு ப.இளையகோபால்<br>வெ.சரண்யா |
| 23 | 10.08.2025 | நம்பியூர் கிழக்கு ஒன்றியம் | கோசணம் | எஸ்.எம்.செந்தில்<br>செ.தமிழரசன் |
| 24 | | எலத்தூர் பேரூர் | எலத்தூர் | எஸ்.எம்.செந்தில்<br>செ.தமிழரசன் |
| 25 | | நம்பியூர் மேற்கு ஒன்றியம் | காவிலிபாளையம் | எஸ்.எம்.செந்தில்<br>செ.தமிழரசன் |
| 26 | | காசிபாளையம் பேரூர் | காசிபாளையம் | பவானி கண்ணன்<br>செ.நந்தகோபால் |
| 27 | | பெரியகொடிவேரி பேரூர் | பெரியகொடிவேரி | பவானி கண்ணன்<br>செ.நந்தகோபால் |
| 28 | | டி.என்.பாளையம் தெற்கு ஒன்றியம் | ஒடையாக்கவுண்டன்பாளையம் | பவானி கண்ணன்<br>செ.நந்தகோபால் |
| 29 | 12.08.2025 | தாளவாடி கிழக்கு ஒன்றியம் | திங்களூர் | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 30 | | தாளவாடி மேற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், தாளவாடி. | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.நந்தகோபால் |
| 31 | 13.08.2025 | சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியம் | கடம்பூர் | ஈரோடு ப.இளையகோபால்<br>செ.தமிழரசன் |
| 32 | 14.08.2025 | கோபிச்செட்டிப்பாளையம் நகரம் | பேருந்து நிலையம் அருகில், கோபிச்செட்டிப்பாளையம். | கந்திலி கரிகாலன்<br>வெ.சரண்யா |

**ஈரோடு**

நாள் : 26.07.2025

கலைஞர் 100 1924 - 2023

